1969 ஆகஸ்ட் 16]

அரசாங்கத்திடமிருந்து இந்த அரசுக்கு ஏதாவது குறிப்பு வந்ததா? மத்திய அரசு, இந்த அரசை இதுபற்றிக் கலந்தாலோசித்ததா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அதுபற்றிய தகவல்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: தலைவர் அவர்களே, மெட்ராஸ் ஸ்டேட் எந்த விஷயத்திலும் முன்னணியில் நிற்கிறது. யூனிவர்சிடி கிரேடிலும் மற்றவற்றிற்கு குறைச்சல் இல்லையென்பது எல்லோருக்குட் தெரிந்த விஷயம். கடந்த சில ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ். பரீட்சையில் நிறைய பேர் பாஸ் செய்யாததற்குக் காரணம் ஏதாவது இருக்கிறதா? தற்போதைய கல்விமுறையினால் இந்தக் குறை ஏற்பட்டதா? அப்படி கல்வி முறையில் இக்குறை ஏற்பட்டதென்றால் கல்வி முறையினைத் திருத்தியமைப்பதுபற்றி ஏதாவது பரிசிலனை இருந்து வருகிறதா? இந்த அரசு இதற்காக எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் என்ன? முதலமைச்சர் அவர்கள் இதற்கான காரணத்தைப் பரிசிலனை செய்வாரா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கடந்த சில ஆண்டுகளாகவே நம்முடைய மாநிலத்திலிருந்து சென்று ஐ.ஏ.எஸ். பாஸ் செய்கின்றவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இந்தக் குறை கல்வி முறையினால் ஏற்பட்டதா, அல்லது வேறு காரணங்களினால் ஏற்பட்டதா என்பதுபற்றி ஆராய்ந்து, என்ன செய்யலாம் என்பது பற்றி அரசு பரிசிலித்து வருகிறது.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Chief Minister whether any posts have been kept vacant by this Government?

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not have details about that. The main question is about the number of I.A.S. officers and how they are recruited.

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு

*4 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

புறம்போக்கில் வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மின்சார பம்பு இணைக்க அனுமதி அளிக்கும் திட்டம் அரசினரின் ஆய்வில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசு இந்தக் கருத்தை ஆய்வு செய்து பின்பற்ற வேண்டியதில்லை என்று தீர்மானித்துள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, செஞ்சி வட்டம் விவசாயப் பகுதியாக இருப்பதால் ஏராளமான கிராமங்களில் புறம்போக்கு நிலத்தில் வெட்டப்பட்ட கிணறுகள் உள்ளன. புறம்போக்கு நிலங்களில் வெட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கு மின்சார இணைப்பு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உத்தரவு வாங்கி வருமாறு மின்சாரத் துறையினர் கூறுகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று அனுமதி வாங்குவதில் காலதாமதம் ஏற்படும். ஆகவே, வட்ட ஆட்சித் தலைவரே மின்சார பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு தர அனுமதி வழங்கலாம் என்று உத்தரவிட வேண்டியதுபற்றி இந்த அரசு பரிசீலிந்ததா? அதற்கான உத்தரவை கூடிய சீக்கிரம் அரசு வட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்புமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களில் வெட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கு வருவாய்த் துறையின் அனுமதியின்றி மின்சார இணைப்பு வழங்குவது முறைகேடானது என்றும், புறம்போக்கு நிலங்களில் அனுமதியின்றி கிணறுகள் வெட்டுவது, நீர்ப்பாசனம் செய்வது, முறைகேடானது என்றும் வருவாய்த் துறையினர் கருதுகின்றனர். பட்டா நிலமாக ஆகாதவரையில் கிணறுகள் வெட்டுவதும், விசையேற்றத்திற்கு மின் இணைப்பு தருவதும் தவறு என்று வருவாய்த்துறை சுட்டிக்காட்டுவதை இந்த அரசு ஏற்றுக் கொண்டது. அதன் காரணமாகவே புறம்போக்கு நிலங்களில் வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மின் இணைப்பு தருவதற்கு வழி ஏற்படவில்லை.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, கடற்கரையோரப் பகுதிகளில் பத்துப் பதினைந்து ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் உப்பளங்களைப் போட்டு பிழைக்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்டார் அவற்றிற்கு தீர்வையும் வசூலித்து வருகிறார்கள். உப்பளங்களில் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு வசதி கிடைக்கிறது. ஆகவே, உப்பளங்களில் உள்ள பம்ப் செட்டுகளுக்காவது மின் இணைப்பு அமைத்துக் கொடுக்க தமிழக அரசு முன்வருமா ? அரசு இதுபற்றி தக்க வழிவகைகளை ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மின்சாரம் வழங்குவதைப்பற்றி மின்சார வாரியம் ஆயத்தமாக இருக்கிறது. இது பற்றி வருவாய்த் துறையையும் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும். வருவாய்த் துறை தக்க வழிவகைகளை ஆராய்ந்து முடிவெடுத்தால் மின்சார இணைப்பு செய்துதரப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களில் வெட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கு மின்சார இணைப்பு வழங்குவது சாத்தியமாகாது என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே கிணறுகளைத் தோண்டிவிட்ட

1968 ஆகஸ்ட் 16]

பிறகு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகவேனும் கிணறுகள் தோண்டப்பட்ட புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுத்து, மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? வருவாய்த் துறை அமைச்சரும் பக்கத்திலேதான் இருக்கிறார். அவரையும் கலந்தாலோசித்து புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுத்து, மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அங்கத்தினர் கூறுவது போன்று, வருவாய்த் துறை அமைச்சருக்கும் இதுபற்றி விண்ணப்பித்தாலும், அவர் பரிசீலனை செய்து, அதன் மேல் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களில் கிணறு வெட்டுவது என்பது தண்ணீர் கிடைப்பதைப் பொறுத்துத்தான். தண்ணீர் இருப்பதாலேதான் அந்த இடங்களில் கிணறுகளை வெட்டுகிறார்கள். இதற்கு வருவாய்த்துறை அப்ஜெக்ஷன் செய்கிறது. ஆகவே, தண்ணீர் கிடைக்கக்கூடிய இடங்களில் வெட்டப்படும் கிணறுகள் உள்ள புறம்போக்கு நிலத்தை பட்டா செய்துகொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலிலே நான் எடுத்துச் சொன்னபடி, இந்த விஷயம் வருவாய்த் துறையிலே தீர்க்கப்பட வேண்டியது. அதன் பின்னர்தான் மின்சார வாரியம் மின்இணைப்புத் தர ஏற்பாடு செய்யும்.

Co-operative Sugar Factory in Satangulam

*5 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start a Co-operative Sugar Factory in Satangulam in Tirunelveli district?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப்பிறகு, நெல்லை மாவட்டத்தில் பாரி கம்பெனிக்குச் சொந்தமான ஆலை ஒன்று பதனீரிலிருந்து சர்க்கரை செய்யக்கூடிய முறையில் இயங்கி வந்தது. அந்தப் பகுதியில் கச்சாப் பொருளான பதனீர் ஏராளமான அளவில் கிடைக்கிறது. ஆகவே, இலங்கையிலிருந்து வரக்கூடிய மக்களுக்கு வேலை கொடுத்து, மறுவாழ்வு அளித்து உதவ வேண்டிய நிலை தமிழக அரசுக்கு இருப்பதால் நெல்லை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டத்தைப் புனராலோசனை செய்யவேண்டும். நெல்லை மாவட்டத்தில் குலசேகரன்பட்டினம் அல்லது வேறு எந்த இடத்திலாவது சர்க்கரை ஆலையை நிறுவ அரசு முன்வருமா?